அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – 2008–09 மற்றும் 2009–10ம் ஆண்டுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கு வாங்கவுள்ள புத்தகங்களை தேர்வு செய்யும் குழு மாற்றியமைக்கப்பட்டு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(மா.அ.தி.1) துறை.**

அரசு ஆணை (நிலை) எண்.23 நாள்:19.3.2009.

படிக்கப்பட்டவை:

அரசாணை (நிலை) எண்.208, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 31.12.2007.

* * * * *

**ஆணை:**

2008–2009 மற்றும் 2009–2010ஆம் ஆண்டுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்குவது சம்பந்தமாக, புத்தக பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் புத்தகம் வழங்குவதற்கு விருப்பம் தெரிவிப்பதற்கான (Expression of Interest) அறிவிப்பு 5.1.2009 அன்று பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டு, 9.2.2009க்குள் விருப்பம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி தற்போது புத்தகப்பதிப்பாளர்கள் / புத்தக விற்பனையாளர்களிடமிருந்து புத்தகங்கள் பெறப்பட்டுள்ளது. எனவே தற்போது புத்தகங்களை தேர்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது.

2) மேற்கண்ட சூழ்நிலையில் 2008–2009 மற்றும் 2009–2010 ஆண்டுகளுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்குவதற்குத் தேர்வு செய்ய தமிழ் மொழியில் அனுபவம் வாய்ந்த நபர்களைக் கொண்ட மாற்றியமைக்கப்பட்ட குழுவினை (reconstituted committee) அமைக்கவும், புத்தகங்கள் தேர்வு தவிர பிற பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரே தொடர்ந்து கவனிக்கலாம் என்றும் முடிவு செய்து கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

**அ) 2008–2009 மற்றும் 2009–2010 ஆண்டுகளுக்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்குவதற்கு தேர்வு செய்ய மாற்றியமைக்கப்பட்ட குழு (reconstituted committee):-**

| | | |
|---|---|---|
| (i) | திரு.N.முருகானந்தம், இ.ஆ.ப.,<br>திட்ட இயக்குநர்,<br>வாழ்ந்து காட்டுவோம் திட்டம். | தலைவர் மற்றும் கூட்டுநர் (Chairman and convener) |
| (ii) | திரு.T.உதயசந்திரன், இ.ஆ.ப.,<br>மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம். | உறுப்பினர் |

(iii) டாக்டர் R,அம்புஜா, நூலகர், சென்னைப் பல்கலைக் கழகம் — உறுப்பினர்

(iv) திரு.V.கண்ணபுர கண்ணன், இயக்குநர், தமிழ் வளர்ச்சி — உறுப்பினர்

(v) திரு.D.ஜகன்னாதன், கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. — உறுப்பினர்

(vi) திரு.V.ரமணி, இயக்குநர், பொது நூலகங்கள் — உறுப்பினர்

(vii) திரு.L.பேட்ரிக், நூலகர், சென்னை கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, சேத்துப்பட்டு, சென்னை. — உறுப்பினர்

ஆ) புத்தகங்களைத் தேர்வு செய்வதைத் தவிர, பிற பணிகளான புத்தகங்களை வாங்குவதற்கான நடைமுறைகளை (Process) கடைப்பிடித்தல் மற்றும் புத்தகங்கள் வாங்குவதற்கான ஆணைகள் (Placement of orders) பிறப்பித்தல் போன்றவைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தொடர்ந்து கவனிக்கவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.